மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லா வட்டங்களிலும் நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 66,88,496.72. உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி வேலை வாய்ப்பைப் பற்றியது. நான் இறுதியாக அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு வேலைவாய்ப்பு தருகின்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபடும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசின் சார்பிலே வரி தள்ளுபடி செய்யப்பட்டு, கூட்டுறவுக் கடன்களையும் நீண்டகாலக் கடன்களாக மாற்றியதற்குப் பின்னர், தஞ்சை, நாகை, ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டங்களில் உள்ள குத்தகை விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேற்றப்படுகிறார்களே, அவற்றை நிறுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. வந்ததற்குப் பிறகு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதா, அல்லவா என்பதைப் பற்றி தீர்மானிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 210, திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

210—

காவேரிப்பட்டணத்தில் தொழிற்சாலை அமைத்தல்

***809—திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், காவேரிப் பட்டணத்தில் தேங்காய்ப்பூ தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் இளநீரைப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஆகியவற்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டணத்தில் தேங்காய்ப் பூ தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வெங்கடேசன் இருக்கையில் இல்லை. திரு. ஜி. எல். வெங்கடாசலம்.

திரு. ஜி. எல். வெங்கடாசலம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டணம், பாலக்கோடு ஆகிய பகுதிகளில் அதிக அளவில் தென்னை உற்பத்தி ஆகிறபடியால், அங்கே விவசாயிகளின் நலன் கருதி அடுத்த ஆண்டிலாவது இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அரசு இதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேங்காயைவிட மாம்பழம்தான் அதிகமாக தர்மபுரி மாவட்டத்தில் உற்பத்தியாகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 211, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

211—

CONSTRUCTION OF KELAVARAPALLI ANAICUT

*** 67–Thiru B. VENKATASAMY:**

Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) What is the stage of construction of Kelavarapalli Anaicut, which was started ten years ago; and

(b) the steps taken to increase the storage capacity in that anaicut?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,